கஜேந்திரமோக்ஷம்.

ஆர்யதர்மம்.

புத். 3.
ஸஞ். 12.

காளயுக்தி௵ சைத்திர சுத்தபஞ்சமி

வியாஸாசலீயம்.

(முன்தொடர்ச்சி.)

इदमुदीरितवान्कमलाधिपं गुरुरुपस्थितकार्यविशेषवित् ।
शृणु हरे व्यसने समुपस्थिते वयमिहागमने विहितोद्यमाः ॥ ५० ॥

உடனே அச்சமயம் நேர்ந்திருக்கும் கார்யத்தினுடைய விசேஷத்தை அறிந்தவரான பிரகஸ்பதியானவர் விஷ்ணுவைச் சம்போதனம்செய்து துக்கம் நேர்ந்திருக்கிறபடியால் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம் என்கிற அபிப்பிராயத்தை லக்ஷ்மீபதியான ஸ்ரீ பகவானிடம் தெரிவித்தார்.

न खलु विभो वयं व्यसनात्पुरा न च पुनर्विहितेऽभिमते प्रभो ।
न हि शिशोरपराधमुदीक्ष्यते गुरुजनः कृपयाकुशयायुतः ॥ ५१ ॥

மறுபடியும் பிரஹஸ்பதியானவர் இதற்கு முன் வராமல் நமக்குக் காரியம் ஆகவேண்டிய ஸமயத்தில் மாத்திரம் நாம் வந்திருப்பது ஸரியல்லவென்று நினைத்து அதற்கு பரிகாரமாகச் சொல்லுகின்றார். "ஹே பிரபோ, இந்தத் துக்கம் ஏற்படுவதற்கு முந்தியும் நாங்கள் தங்களைப் பார்க்கவில்லை. இதை நிவர்த்திசெய்துவிட்டால் பிறகுதர்சனம் செய்யப்போவதில்லை. ஆனாலும் கருணைக்கடலாயிருக்கும் குரு ஜனமானது சிசுவினுடைய அபராதத்தை கவனிக்மாட்டாதன்றோ"

अविदितं तव नास्ति जगत्त्रये सकलबुद्धिगुहागृहवासिनः ।
तदुपकिञ्चिदुदीर्यत एव ते व्यसनमागतमन्यत एव नः ॥ ५२ ॥

"மூன்றுலகிலுமுள்ள பிராணிகளுடைய புத்தியாகிற கிருகத்தில் வஸிக்கின்றவரான தங்களுக்குத் தெரியாத தொன்றுமில்லை. அவ்விதமிருந்தாலும் தங்கள் ஸன்னிதியில் ஒரு விக்ஞாபனம் செய்துகொள்ளப்படுகிறது. அதாவது வேறு இடத்திலிருந்து எங்களுக்கு விசேஷமான துக்கம் ஏற்பட்டிருக்கின்றது"

मुनिसुतः प्रथमे वयसि स्थितश्चरति घोरतपः स्थिरमानसः ।
न किल तेऽपि पुरेदृशमाचरन्न च पुनश्चरितारं इति श्रुतम् ॥ ५३ ॥

"பின்னும் சிறுவயதிலிருக்கும் ஒரு முனிக்குமாரன் சலிக்காத மனதையுடையவனாய்க்கொண்டு உக்கிரமான தபஸ்ஸைச் செய்கிறான். இதற்கு முன்னும் ஒருவருமிவ்விதம் செய்யவில்லை, இனிமேலும் செய்யப் போகிறதில்லை. என்று கேட்கப்படுகின்றது."

स हि जिगाय तनूत्थिततेजसा परिदहन्नभिभूय महांस्यपि ।
अजिततत्तपसो विनिवर्त्तितं जगदिदं परिपाल्य पूर्ववत् ॥ ५४ ॥

"அம்முனி குமாரன் சரீரத்திலிருந்துண்டான தேஜஸ்வினால் ஜகத்தைக் கொளுத்துகிறவனாய்க்கொண்டு

சகல தேஜஸ்ஸுகளையும் அவமதித்து ஜயித்துவிட்டான். ஆகையால் இந்தக் கஷ்டத்திலிருந்தும் ஜகத்தைத்திருப்பி முன்போல் ரக்ஷிக்கவேண்டியது உங்களுடைய கடமை” என்று சொன்னார்.

किमभिवाञ्छति वाञ्छितमुद्दिशंश्चरति घोरतरं स शिशुस्तपः ।
शिवत एव ततो विनिवृत्तये न हि वय तदुदीक्षितुमीश्महे ॥ ५५ ॥

இவ்விதம் சொல்லும் பிரஹஸ்பதியைப் பார்த்து விஷ்ணு கூறுகின்றார் “ அந்த பாலனானவன் எதனை விரும்புகின்றானோ எதில் இச்சையுடையவனாய்க்கொண்டு கடூரமான தவம்புரிகின்றானோ அவ்வித தவத்திலிருந்தும் பரமசிவனைக்கொண்டு நிவர்த்தியடையும்படி செய்யவேண்டும். நாம் அதைக் கவனிப்பதற்குச் சமர்த்தரல்ல” என்றார்.

मदभिवाञ्छितमेतदनुत्तमं सुरगणैर्विधिशक्रपुरोगमैः ।
यदुत पालनकर्म ममेरितं ह्यहमयानि शिवं साशिवं सुराः ॥ ५६ ॥

பிரம்மா இந்திரன் இவர்களை முன்னிட்டு வந்திருக்கும் தேவகணங்களால் என்னிடத்திலிருந்தும் யாதொன்று அபேக்ஷிக்கப்படுகிறதோ, அது மிகவும் சிறந்தது. ஹே தேவதைகளே, எனக்கேற்பட்ட மங்களகரமான பாலனகர்மாவை நான் செய்கிறேன்.

मम तु कार्यमिदं परिपालनं कमलजन्मन एव सृजिक्रिया ।
हरणकर्म हरस्य समीरितं तदपि नैकत एव हि जायते ॥ ५७ ॥

மேலும் பரிபாலனமென்கிற இந்தக் காரியமானது என்னுடையது. சிருஷ்டிக்கும் கர்மாவானது கமலோத்பவனான பிர்ம்மாவினுடையது. ஸம்ஹாரகர்மாவானது ஹரனுடையதாகக் கூறப்படுகின்றது. அதுவும் ஒரே இடத்திலிருந்தே ஏற்படமாட்டாதல்லவா?

मम वचः परिपालयिता शिवस्तमभिगम्य हिताहितबोधकम् ।
सह गताः कथयाम शिवाय नो व्यसनमाततमेतदुपस्थितम् ॥ ५८ ॥

ஹிதாஹிதத்தை யறிவிக்கும் என் வசனத்தைக் கேட்டு நடத்துகிறவர் பரமசிவனே. ஆகையால் ஹே தேவர்களே, எல்லோரும் சேர்ந்து சிவனிடம் சென்று தற்காலம் நேர்ந்திருக்கும் அதிகமான நமது கஷ்டத்தை அவரிடம் தெரிவிப்போமென்று கூறினர்.

इति हरिर्गमनीय समुद्यतो गरुडमस्मरदेष समागमत् ।
तमधिरुह्य सुरैः समुपयिवान्रजतभूधरभूधरसुत्तम ॥ ५९ ॥

இவ்விதம் சொல்லிவிட்டு உடனே ஹரியானவர் சிவனிடம் போகவேண்டித் தன் வாகனமான கருடனை ஸ்மரித்தார். கருடனும் வந்துவிட்டது. அதில் ஏறிக்கொண்டு தேவதைகளுடன்கூடப் பர்வதங்களுக்குள் சிரேஷ்டமான கைலாஸகிரியை யடைந்தார்.

हरिविरिञ्चिपुरोगमवासवः शिवपदं गुणपूर्णमलोकत ।
समवरुह्य ततो निजवाहनात्सविनयं प्रतिहारभुवं ययौ ॥ ६० ॥

விஷ்ணு பிரம்மா இவர்களை முன்னிட்டுக்கொண்டு போகும் இந்திரன் சிவகணங்களால் நிறைந்திருக்கும் கைலாஸகிரியைப் பார்த்தான். உடனே ஹரியானவர் தம் வாகனத்திலிருந்தும் இறங்கி மரியாதையாய்த் துவாரபூமியையடைந்தார்.

कनकवेत्रधरं स च नन्दिनं धवलदेहमपृच्छदनेहसम् ।
हरिमयं वदति स्म सदा हरे समय एव हरेः प्रतिपालनम् ॥ ६१ ॥

அவ்விடத்தில் ஸுவர்ணப்பிரம்பை தரித்துக்கொண்டு வெளுப்பான மேனியுடனிருக்கும் நந்திகேசுவரனைப்பார்த்து "ஈசுவரனைப் பார்க்க ஸமயமெப்படி" என்று பிரச்னம்பண்ணினர். நந்தியும் ஹரியைப் பார்த்து "தங்களுக்கு எப்பொழுதும் ஸமயந்தான் போகலாம்" என்று கூறினர்.

(இன்னும் வரும்.)

ஒரு சம்பாஷணை.

பாலசந்திர தீக்ஷிதருக்கும் குமுதாகர சாஸ்திரிகளுக்கும் நடந்தது.

(முன்தொடர்ச்சி.)

கு—சுத்த தர்மமண்டலத்தில் கூடியிருக்கும் சுத்ததாசர்கள் இவ்விதம் கூறுகின்றார்கள்,

பா—அப்படியானாலிதுவு முண்மைதான். பின்னும் முனிகள்கூட ஆலமரத்தில் வசிக்கிறார்கள் என்பதைக் கேட்க மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது. ஒருக்கால் இவ்விதமும் சம்பவிக்கலாம். எங்ஙனமெனில், முனியென்று பெயர் வாய்ந்த பிரமராக்ஷசர்கள் அவர்கள். பிரமராக்ஷஸர்களுக்கு எப்பொழுதும் வடவிருக்ஷத்தில் வாசமென்பது பிரஸித்தமே. இது போதும். சாஸ்திரங்களை விரித்துக் கூறும்.

கு—எல்லா சாஸ்திரங்களையும் இப்பொழுது தெரிவிக்க முடியாது. பிரணவவாதம் முதலிய நான்கு கிரந்தங்கள்தாம் வெளியாயிருக்கின்றன. அவைகளுள் இந்தக் கீதா கிரந்தமானது மூன்றாவது. ஆனாலும் இது ஒன்றுமாத்திரம் அற்பமறியப்படுகின்றது. அதாவது சுத்தமகாபாரதம் சுத்தராமாயணம் சுத்தவேதம் சுத்தஸ்மிருதி சுத்தபுராணம் சுத்தபாஷ்யம் முதலிய சகலமான கிரந்தங்களும் சுத்த தர்மமண்டல கிரந்தாவளியில் வெளிவந்து பிரஸித்தியடையப்போகின்றன.

பா—அப்படியானால் உன்மத்தபிரலாபாவளியில் என்று கூறவேண்டும். அவைகளுக்குள் உன்மத்த கீதையென்கிற இது தற்காலம் வெளிவந்துவிட்டது. இது இருக்கட்டும் மற்றொன்று கேட்கவேண்டியிருக்கின்

றது. அதாவது சுத்த தர்மமண்டலத்தில் அச்சிட்ட புஸ்தகங்களுக்குள் இது மூன்றாவது என்று சொல்லுகின்றீர். இகா அச்சிட்ட புஸ்தகங்களின் பெயர் எவை?

கு—கஷ்டம் அதையும் கூறவேண்டுமா? கேளும் சொல்லுகிறேன். கார்க்கியாயன மகரிஷியாலியற்றப்பட்ட பிரணவார்த்தவாதம், யோகாநந்தரால் செய்யப்பட்ட பிரணவர்த்த காரிகையுடன் கூடியது. இதுதான் முதல் கிரந்தம். பகவானுன நாராயணரால் கூறப்பட்ட யோகதீபிகை என்பது இரண்டாவது. பகவத்கீதை ஸ்லோகிபில காரிகை இவ்விரண்டும் மூன்றாவது.. ஹம்ஸயோகியால் செய்யப்பட்ட அநுஷ்டான சந்திரிகை என்று பெயர் வாய்ந்த ஸநாதந தர்ம தீபிகா என்பது-நான்காவது கிரந்தம். இவைகள் தாம் இப்பொழுது வெளிவந்திருக்கின்றன.

பா—ஆச்சரியம்! ஆச்சரியம்!! இதுவரையில் கேட்கப்படாத கிரந்தங்களெல்லாம் பிரசித்தமாயிருக்கின்றன. இதுவும் கலிவிலாஸத்தின் விந்தையே. கீதையைத் தவிர மற்றமுள்ள கிரந்தங்களும் உம்மால் பார்க்கப்பட்டிருக்கின்றனவா?

கு—பிரணவார்த்தத்தை மாத்திரம் அற்பமறிந்திருக்கிறேன்.

பா—பிரணவார்த்தமென்றால் என்ன?

கு—பிரணவார்த்தமென்றால் அது ஒரு ஸம்ஸ்கிருத கிரந்தம்.

பா—அதென்ன வாக்கிய ரூபமா? அல்லது சுலோக ரூபமா?

கு—இவ்விதமென்று என்னால் தீர்மானிக்கமுடியவில்லை.

பா—பார்த்தும் என் நிச்சயிக்கமுடியவில்லை.

கு—அதில் ஒரு இடத்தில் ருக்குக்கள்போலும், யஜுஸுக் கள்போல் மற்றொரு இடத்திலும் ஸாமாக்களாக சில விடத்திலும் சுலோகங்களாக வேறிடத்திலும் காணப் படுகின்றன. அந்தக் கிரந்தமானது அதிகம் ஸம்ஸ் கிருதாக்ஷரமயங்களென்றும் ஸம்ஸ்கிருதபாஷா சுலோ கங்களோடு கூடியதென்று மாத்திரம் கூறமுடியும்.

பா—இது இருக்கட்டும். அந்தக் கிரந்தத்திற்கு அர்த்த மென்ன?

கு—மூன்று ரூ (3) பாய்.

பா—அர்த்தமென்னவென்றால் அதின் விலையென்னவென் று நான் கேட்கவில்லை. அதை இயற்றியவரின் அபிப் பிராயத்திற்கு விஷயமான கருத்தென்னவென்று கேட்கிறேன்.

கு—நான் சொல்லிய அர்த்தத்தைக் காட்டிலும் வேறு ஒன்றுமிருப்பதாகத் தெரியவில்லை.

பா—பரிஹாசம் வேண்டாம். கிரந்தமென்றால் யேதாகிலு மோர் கருத்தில்லாமலிருக்குமா.

கு—முன் என்னால் வர்ணிக்கப்பட்ட பிரகாரமிருக்கும். வர்ண சமுதாயங்களுக்கு ஓர் அர்த்தத்தைக் கூறுவ தற்கு யாரால்தான் முடியும். ஒருகால் அவசியம் அறிந்துகொள்ளவேண்டுமென்கிற விருப்பமிருந்தால் சுத்தாரியர்களை உபாஸித்து அவர்களுடைய பிரசா தத்தினாலடையப்பட்ட அர்த்தங்களை வேறு சமயத் தில் வெளியிடுகிறேன்.

பா—சிவசிவ, இக்கலி விலாஸத்தை உபாஸித்தும் தெரிந்து கொள்ளவேண்டுமா. அன்றியும் உன்மத்த பாரதம் முதலிய கிரந்தங்களும் கிரமமாய் உண்டாகப்போகின் றன. ஆச்சரியம், ஆச்சரியம்! கலிகால மனுஷ்யர்க

ளுக்கு இது ஒரு பெரும்பாக்கியமே. மற்றொன்று மறிய விரும்புகிறேன். அதாவது உம்மால் அடிக்கடி சுத்தாரிபர்களை யடைந்தே அவர்களுடைய கிரந்தங்களையறிந்து கொள்ளவேண்டுமென்று கூறப்படுகின்றது. நம்மாலடையத் தகுந்த சுத்தர்மசமயாசாரியார் என்பவர் யார்? அவர் உம்மால் அறியப்பட்டிருக்கின்றாரா? அல்லது கேட்கப்பட்டிருக்கின்றாரா?

கு—பெயரால் நன்கு அறியப்படுகின்றார். வியக்தியாலில்லை.

பா—அப்படியானால் அப்பெயர் என்ன?

கு—இவ்விடத்திலேயே கீதையின் ஆரம்பத்தில்,

ईशपुत्र महाभाग नमस्ते लोकनायक ।
कथं योगब्रह्मविद्या गीता ध्येया मनीषिणा ।
संकल्पनायकश्चैव प्रणमेद्भक्तिभावतः ।

இதுபரியந்தமுள்ள ஆறு சுலோகங்களால் குரு சிஷ்யனினுவிடை ரூபமாக ஸூசனம் செய்யப்பட்டிருக்கின்றது.

பா—இவ்விடத்தில் குரு எப்படி அறியப்படுகிறார்?

கு—சுத்த மண்டலத்திலிருக்கும் எல்லா தர்ஸிகளுக்கும் குருவாக அடையத்தகுந்தவராயும் ஈசபுத்திரரென்று பெயர்கொண்ட ஸம்ஸார நாயகர் ஒருவரிருக்கிறார். அவரை அடைந்துதான் தீக்ஷாபூர்வமாய் ரகஸ்யமான அர்த்தங்களெல்லாம் கேட்கவேண்டுமென்று வேறு கிரந்தத்தாலும் தெரிகின்றது.

பா—வியக்தியினால் ஸதாசாரியர் இன்னாரென்று அறியப்படவில்லை. இவ்விதமிருப்பது நம் பாக்கியக்குறைவே. இது இருக்கட்டும். ஸம்ஸார நாயகரென்றால் என்ன? அவரை அடையவேண்டிய பிரகாரம் எப்படி?

கு—அதுவும் அற்பந்தான் கேட்கப்பட்டிருக்கின்றது. சுருக்கமாய்க் கூறுகின்றேன். சுத்தாரியர்களுடைய கொள்கையில் ஐந்து ஸம்ஸாரங்களிருக்கின்றன. அவைகளில் ஐந்தாவதான ஸம்ஸாரந்தான் சிரேஷ்டம் அதிலிருப்பவன் முக்தனுகலாம். அவனே பரமேசுவாநுதலாம் சுத்தார்யர்களால் இந்த ஐந்தாவது ஸம்ஸாரத்தின் ஸாமீப்யத்தையே முக்தியாகக் கூறப்படுகின்றது. பாக்கி நான்கு சம்சாரங்களுக்கும் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களுக்கு அந்தந்த ஸம்ஸாராதிபதிகளால் உபதேசிக்கப்படும். தர்மமார்க்கானுஷ்டானரூபங்களேயாகும். அந்த ஸம்ஸாரங்களையும் கிரமமாகத்தான் அடையவேண்டும். நம்மால் தற்காலம் வசிக்கப்படும் இந்த லோகம்தான் அவைகளுக்குள் முதல் ஸம்ஸாரம். இந்த ஸம்ஸாரத்திற்குத்தான் நாயகன் ஈசபுத்திரனென்கிற மகாபுருஷன சுத்தாசாரியருடைய பதவியையடைந்திருக்கிறார். அவர் நவக்கிராகம் முதலிய பிரதிக்ஞைகளை முன்னிட்டு அடையத்தகுந்தவர் என்று கேட்கப்படுகின்றது.

பா—கிராகமென்றுலென்ன?

கு—கிராகமென்பது பிரதிக்ஞா விசேஷந்தான். அதுவும் முன் சித்தமான வர்ணுசிரம தர்மத்தை விடுவதுதானென்று அவர்களுடைய கிரந்தத்தாலறியப்படுகின்றது.

பா—கஷ்டம், ஓய் கஷ்டம்! எல்லாம் கேட்கப்பட்டன. நாளைத்தினமோ அல்லது மறுதினமோ கலி. உலகங்களைச் சாப்பிடப் போகிறான். இது இருக்கட்டும் இந்த விஷயத்தில் மற்றென்று தீர்மானமாயறியப்படுகின்றது. அதாவது புராண கீதையானது ஜம்புகப் பிராமணரால் தூஷிக்கப்பட்டிருக்கின்றது. அந்த

ரகஸ்யத்தையறியாமல் ஸ்ரீசங்கரபகவத்பாதர் முதலியோர்கள் மோசம்போனார்கள். அதற்கு இருபத்தாறு அத்தியாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஞானம், ஸங்கல்பம், கர்மம், யோகம், எனப் பெயர்வாய்ந்த நான்கு பாதங்களிருக்கின்றன. இதுதான் கீதா சாஸ்திரமென்று சொல்லப்படும். இது நான்கு பாதமாயேற்பட்டதற்கு முலம் காயத்ரீ நான்கு பாதமாயிருப்பதுதான். அந்த விஷயத்தில் சுத்தார்யர்கள் சொல்லுவதுதான் பிரமாணம். ஏனென்றால் காயத்ரீ த்ரிபதை என்று பலவிடங்களில் கேட்கப்படுகின்றதே பிராமணம். இதரர்கள் இதை அங்கீகரிக்கமாட்டார்கள். அத்தியாயமும் 26. காயத்ரீயால் கூறப்பட்ட தத்துவங்கள், 24-க்கு 24 அத்தியாயமும், பராசக்தி, பரபிர்ம்மம் என்கிற இவ்விரண்டிற்கும் இரண்டத்தியாயமும். ஆக 26 அத்தியாயங்கள் ஏற்பட்டதற்கு இவையே முதற் காரணம். கோபிலகாரிகையில், 2-ம் அத்தியாயங்களாகப் பிரித்து இக்கருத்தைக் கூறியிருப்பதே இரண்டாவது காரணமாகும். இதிலிருக்கும் சுலோகங்களோ—745. இவைகளில் புராண கீதையின் சுலோகங்கள் 550-பாக்கிகளும் அநேகமாய் பாரதத்திலிருப்பவையே. இந்தக் கீதையும் ஸநாதனதர்மம் என்கிற விஷயத்தையே போதிக்கின்றது. இது எவ்விடத்திலும் இல்லை. இங்குக் குறிப்பிடப்பட்ட பிரகரணார்த்தங்களும், கிரந்தத்திற்கும் விஷயங்களுக்குமிருக்கும் சம்மந்தமும் சுத்தார்யர்களால் மாத்திரம் அறியத்தகுந்தது. இதில் மேற்றிசையோரான சிறந்த கவிகளால் செய்யப்பட்ட ஆத்மதத்வ சாஸ்திரத்தின் பொதுவான இலக்கணமிருக்கிறபடியால் நம்பண்டிதர்கள் இதைப் படிக்கவோ பிறருக்குக் கற்பிக்கவோ அதிகாரிகளாகமாட்டார்கள்.

கு—நண்பனே, மேற்றிசையிலிருக்கும் கவிகளால் சாஸ்திர சமுகங்களுக்குச் செய்யப்பட்டிருக்கும் இலக்கணம் யாது?

பா—உம்மாலறியப்படவில்லையா? கேளும் கூறுகின்றேன். இந்திரியங்களாலறியமுடியாத வஸ்துவை விஷயமாகக்கொண்டதாயும் ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாத அர்த்தத்தைச் சொல்லும் பூர்வபக்ஷசித்தாந்த வசனரூபமாயிருக்கும் தன்மை சாஸ்திரத்திற்கு லக்ஷணம். இதானது வேறு இடங்களில் எப்படிவேண்டுமோ அப்படியிருக்கட்டும். இதற்கு எவ்வித தோஷமுமில்லாத சரியான லக்ஷணமுமாகும். சுத்தார்ய மண்டலத்திலிருந்து வெளிவந்த கிரந்தங்களுக்குள் இந்தக் கீதையானது மூன்றுவது. இதின் கருத்தை அநுசரித்துக்கூறும் கோபிலகாரிகையும் இதில் சேர்ந்தது. முறையே பாரதம் முதலான கிரந்தங்களும் வெளி வரப்போகின்றன். இவ்வித கிரந்தங்களைக் கொடுப்பவர்கள் ஹம்சயோகி முதலிய சித்தபுருஷர்கள். அந்தச் சித்தபுருஷர்களும் யக்ஷஸ், பிசாசு முதலியபூதங்களுக்கு இருப்பிடமான ஆசீர்ணபர்ணமென்று பெயர்பூண்ட ஆலமரத்தில் வசிக்கிறார்கள். இவ்விதமில்லாமல் அவர்கள் தங்கள் பந்துஜனங்களை விட்டுவிட்டு வேறு எங்குத்தான் செல்லுவார்கள். இவ்விதம் கூறியது உசிதமே. கஷடம். கஷ்டம். சகலமான இந்த விளையாட்டும் கலியினுடையதே. கீதா சாஸ்திரத்தை எல்லா அவயவங்களையும் அறுத்து ஒரே உருண்டையாயுருட்டி கீசகமாணம்போல் மரிக்கும்படி செய்துவிட்டான். கலியுமிகவும் நன்றாய் இந்த வேலையைச் செய்திருக்கின்றான். இந்தக் கீதையானது துர்போதனன் ரூபமாய் உலகத்தைக் கெடுக்

கவந்த கலியை அடியோடு நாசம்செய்யவேண்டி ஸ்ரீ பகவானுடைய முகத்தினின்றும் வெளியிடப்பட்டது. ஆகையால் இவ்விதம் கீதைக்கு கலி மரணத்தைச் செய்தது நியாயந்தான். நல்லது ஓய் கலியே, நல்லது. கீதாவிஷயத்தில் நல்ல வேலை செய்யப்பட்டது. அர்பகாலத்திற்கு முன் சபையில் பார்தத்தை முறையே கூறும் பெரியோர்களால் இந்தக் கீதை அதின் மத்தியிலிருந்தாலும் இதைக் குரு சிஷ்யக் கிரமமாய் நியமப்படி கிரகிக்கவேண்டும். இவ்விதம் சொல்லக்கூடாதென்று விலக்கிப் பாக்கிப் பாகங்களையே சொல்லிக்கொண்டுவந்தார்கள். அக்காலத்தில் இந்தக் கீதாதேவியானவள் பாண்டவர்களிடத்தில் திரௌபதியானவள்போல் த்விஜாதிகளிடத்தில் மாத்திரம் ரகஸ்யமாய் ஓரிடத்தில் இருந்தாள். அதற்குப் பிறகு திரௌபதி சபையையடைந்ததுபோல் கெட்ட ஜனங்களுடைய காதுக்கு விஷயமாயிருக்கையை யடைந்து விட்டாள். அவளுடைய வஸ்திரத்தை அபகரித்து விகாரம் செய்ததுபோல் வேறுபாஷைகளால் மாற்றி இவளுக்கும் விகாரம் செய்தாலும் அங்கு எப்படி உண்மையான் சொரூபமடையப்படவில்லையோ அவ்விதமே இவளுடைய உண்மையும் அறியப்படவில்லை. எப்படித் திரௌபதிக்கு ஸ்ரீ பகவத்பிரசாதத்தாலுண்டான மாயா வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டதினால் அதிகமான அவமானம் நேரவில்லையோ அவ்விதமே இந்தக் கீதைக்கும் நேரா மலிருக்கின்றது. பகவன் மாயையாகிற் திரியால் மூடப்பட்ட வஸ்துவை அதினுண்மையை யறிய அதிகாரமற்றவர்கள் எவ்வளவு விலக்கினாலும் அம்மாயை விலகாதல்லவா? ஆகையால்தான் அடியோடு நாசம செய்யவேண்டுமென்று நீ, முயற்சிக்கிறுப். உன்

னிஷ்டம்போல் நீ செய்யலாம். காரியசித்திமாத்திரம் உன்னபிப்பிராயம்போல் ஏற்படாது. கீதையென்பவள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய புத்திரி. கருணாநிதியான அந்தப் பகவான் உனக்கு கெடுதலையும் பொருட்டு கீதையை இரக்ஷிப்பர். புராதனமான இந்த பகவத்கீதையானது உம்மால்செய்யப்பட்ட கீதாபாஸத்தால் பாதிக்கப்படமாட்டாது. ஒரு சமயம் இந்தக் கீதாபாஸத்தால் மந்தாதிகாரிகள் வஞ்சிக்கப்பட்டார்களேயாகில் வஞ்சிக்கப்படட்டும். இதினால் ஸஜ்ஜனங்களிடத்தில் வெகு காலமாய் நன்கு பிடிப்பை யடைந்த பூஜ்யையான பிராசீனகீதைக்கு என்றும் கெடுதலில்லை. மித்ர; ஹே குமுதாகா, நீ வருத்தமடையாதே. பகவானை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா விழித்துக்கொண்டிருக்கிறார். சாது ஜனங்களுக்காகவாவது கீதையென்று பெயர்கொண்ட தன் புத்திரியை பாதுகாப்பர். இக்காலமானது குரூரமான கலியாயிருந்தபோதிலும் திருதிராஷ்டிரருடைய அபிப்பிராயத்தை எப்படி ஸ்ரீ பகவான் அங்கீகரித்துப் பிரசாதம் செய்யவில்லையோ அவ்விதமே இக்கலிக்கும் பிரஸாதம் செய்யமாட்டார். அந்தப் பிரபு தர்மத்திற்குக் குறைவையும், அதர்மத்திற்கு விருத்தியையும் சகிக்கமாட்டார். இவ்விதமே கீதை

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

யில் தர்மத்திற்குக் குறைவும் அதர்மத்திற்கு விருத்தியும் நேருங்கால் நான் தர்மரக்ஷணத்திற்காக அவதரிக்கிறேனென்று பகவானே கூறியிருக்கிறார். இது நிற்க வேண்டுமென்று வினவுகின்றேன். அதாவது இந்த

உன்மத்தகீதையானது எங்காகிலும் சொல்லப்படுகின்றதா?

கு—சென்னை நகருக்கருகிலிருக்கும் புரசபாகத்திலேற்படுத்தப்பட்ட சபையில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் கூறப்படுகின்றது.

பா—கலியின் சாமர்த்தியம் மிக்கவியப்பைத்தருகின்றது. கீதை சொல்வதற்கும் யோக்கியமான ஸ்தானமும் ஏற்படுத்தியிருக்கின்றது.

கு—கலியின் சாமர்த்தியம் என்ன ஸ்தானத்திலிருக்கும் யோக்கியதை யாது?

பா—கஷ்டம். இதுவும் உம்மாலறியப்படவில்லையா! ஒவ்வொருக்ஷணமும் புதிதாய் அறியும் திறமை பொருந்திய புத்திசக்தியையடைந்தவர்களும் விசேஷமான வாக் விலாசத்தை யுடையவர்களானசிரவணாதிகாரிகள் அவ்விடத்திலேயேதானிருக்கிறார்கள்.

கு—அவர்களிருப்பதற்கு யோக்கியமான மகிமை பொருந்திய ஸ்தானமங்கிருப்பதால் அங்கு வசிக்கிறார்கள் என்று கூறியது மிகவும் உசிதமாயிருக்கிறது. ஆகையால்தான் உம்மைக் கேட்கவேண்டுமென்று சிதம்பரத்திற்கு வந்தேன்.

பா—கலியினுடைய விலாஸப் பிரஸங்கமானது. இம்மட்டோடு போதும். சாயங்காலத்தில் செய்யவேண்டிய அனுஷ்டான சமயம் வருகின்றது. ஸ்ரீசித்ஸபேசருடைய நடனோத்ஸவாரம்ப ஸமயமாகையால் ஜனங்களின் கோலாகல சப்தத்தோடு கூடப் பெரிய மணியின் சப்தமும் கேட்கிறது. ஆகையால் வீரும் ஸந்தியா கர்மாவை முடித்துவிட்டு ஸ்ரீ பகவத்கீதையின் கருத்திற்கு விஷய பூதராயும் கருணைக் கடலாயும் விளங்கும் சிதம்பரேசனை நடராஜமூர்த்தியினுடைய நம

மால் கேட்கப்பட்ட கலியின் விலாஸரூபமான வார்த்தைகளிலிருந்து முண்டான எவ்வித பாபத்தையும் போக்கடிக்கின்ற நடனோத்ஸவத்தைத் தர்சிப்போம்.

கு—ஸகே, பாலசந்திர, மிகவும் பாபியாகிய இக்கலியின் கடோரமான விலாசத்தினல் சுருதி, ஸ்மிருதி, புராணம் முதலிய சாஸ்திரங்களால் கூறப்பட்டதாயும் எவ்வித மான சுகத்திற்கும முக்கிய காரணமாயிருக்கின்ற நம் பிராசீன தர்மங்களாயும் ஒரு மூலையில் ஒளித்துக்கொண்டன. சாஸ்திரங்களின் சொரூபத்திற்காவது மாறுதலில்லாமலிருக்குமோவென்றால் முக்கியமான கீதாசாஸ்திரத்தின் கதியே இப்படியிருக்கும்பொழுது பாக்கி சாஸ்திரங்களைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ? கஷ்டம்! கஷ்டம்! கலியென்னும் இந்த விஷக்கொடியானது இவ்விதம் விருத்தியாய்க்கொண்டுவந்தால் நாமெல்லாம் பசுபக்ஷிகளைப் போலிருந்துவிட்டு விசேஷபாபங்களைச் செய்து மரித்தபிறகு நாகங்களுக் கிரையாய்விடுமே என்ன செய்கிறதென்று எனக்கு மிகவும் கவலையாயிருக்கின்றது.

பா—நண்ப, குமுதாகாரரே, பயம் வேண்டாம் வாரும். நித்தியஸ்வரூபியாயும அம்பிகாபதியாயும் எங்கும் நிறைந்த பரம்பொருளாய் விளங்கும் ஸ்ரீ ஆனந்த நடராஜமூர்த்தியைச் சேவிப்போம். கருணாநிதியாகிய அந்தப் பிரபுவே நமக்கும் நம் பாரததேசத்திலிருக்கும் ஆஸ்திகர்களுக்கும் தர்மத்தைப் பாதுகாப்பதிலேயே எப்பொழுதும் பற்றுதலையடைந்த மனதையுடையவர்களாய் விளங்கும் நம் சக்கிரவர்த்தி ஸார்வபௌமர்களான ஸ்ரீ ஜார்ஜ்மஹாராஜா அவர்களுக்கும் சகல மங்களங்களையும் அன்புடனளித்து அனுக்கிரகிப்பாரென்பது நிச்சயம்.

மாயாசாஸ்திரம்.

(முன்தொடர்ச்சி.)

சாஸ்திரத்தின் ரஹஸ்யம் அவ்விதம் என்றால் யாகங்களில் பசு, அசுவம் முதலியவைகளைக் கொல்லவேண்டும் என்று என் விதிக்கப்பட்டிருக்கிறது? அது அதர்மமாகமாட்டாதா? தேவி பாகவதம் 1-ம்ஸ்கந்தம், 48-ம் அத்தியாயத்தில் இந்த ஆக்ஷேபணையைப்பற்றி விசாரிக்கப்பட்டிருக்கிறது. Q. யாகத்தில் பிராணிஹிம்ஸை செய்யவேண்டியது அவசியம் தானா? A. யாகம் செய்வது தேவதைகளை திருப்தி செய்வதுதான் யாகத்தின் முக்கியக்கொள்கை. எல்லா யாகத்திலும் பிராணிகளைக் கொல்லவேண்டியதுதானா? பசுக்கள் கொல்லப்படாவிட்டால் யாகம் பூர்த்தியாகிறதில்லையா? யாகத்தில் ஸம்ஜ்ஞபனம் செய்யப்பட்ட பசுக்களின் கதி என்ன? இவைகளை கவனித்துப் பார்ப்போம். கிருதயுகத்தில் ஞானமும் தர்மமும் பூர்ணமாகயிருப்பதால் அந்த யுகத்தில் செய்யப்படும யாகங்களில் பிராணி ஹிம்ஸை செய்யக்கூடாது என்று விதிக்கப்பட்டும் ஹிம்ஸை செய்பவன் நரகத்திற்குப் போவான் என்று சொல்லப்படுகிறது.

इदं कृतयुगं नाम कालः श्रेष्ठः प्रवर्तितः ।
अहिंस्या यज्ञपशवो युगेऽस्मिन् न तदन्यथा ॥ २ ॥ शान्ति. ३४१. ७७
श्रूयते हि पुराकल्पे नृणां व्रीहिमयः पशुः ।
येनायजन्त यज्वानः पुण्यलोकपरायणाः ॥ आनुशा १५. ५६

மஹோதர ரோகத்தை நிவர்த்தித்துக்கொள்ள யத்தனப்பட்ட அம்பரீஷ மஹாராஜா சுனச்சேபனை பசுவாக கொடுத்து வியாதியிலிருந்து விடுதலை அடையலாம் என்று நினைத்து யாகம்செய்ததில் விசுவாமித்ரர் சுனச்சேபனுக்கு வருணப் பிரீதிகரமான மந்திர உபதேசம் செய்ய, அந்த மந்தர பலத்தால் வருணன் சுனச்சேபனை யாகத்திலிருந்து

விடுதலை செய்து, ராஜனுக்கு வரம் கொடுத்ததாக தேவி பாகவதம் 7-ம் ஸ்கந்தம் 17-ம் அத்யாயத்தில் சொல்லப் படவில்லையா ?

मुञ्च राजन् शुनःशेफं स्तुवन्तं मां भृशतरम् ।
यज्ञोऽयं परिपूर्णस्ते रोगमुक्तो भवात्मना ॥

யஜமானனுடைய லக்ஷணங்கள் மேலே விவரிக்கப்பட்டன. அவை அவர் மனோபலத்தையும், சித்த சுத்தியையும் ஞானத்தையும் பொறுத்ததாகவிருக்கின்றன. யஜமானன் இஷ்ட தேவதைகளைத் திருப்தி செய்விக்கவேண்டியது. அது பசுவை ஹிம்ஸிப்பதால்தான் ஏற்படக்கூடியதென்று நினைக்கக்கூடுமோ? ஸ்ரீராமன் ராவணவதத்தால் ஏற்பட்ட பிர்மஹத்தி தோஷத்தைப் போக்கடித்துக்கொள்ள அசுவமேதயாகம் செய்து யாகமுடிவிற் கத்தியால் அசுவத்தின் தலையைத்தொட அந்த அசுவம் தேவனாகிவிட்டது. யாகம் பூர்த்தியாகவில்லையென்று ஸ்ரீராமன் சந்தேகப்பட வஸிஷ்டர் தேவர்களுக்குப் பிரியகரமான கூடம் கொண்டுவரும்படி செய்து தேவர்களை ஆஹ்வானம் செய்யத் தேவர்கள் அந்த ஹவிஸை ஆஸ்வாதம் செய்து திருப்தி அடைந்தார்கள். பத்ம புராணம்—பாதாளகண்டம் 67 அடி சுலோகம்.

"தேவர்களைத் திருப்தி செய்விப்பது ஹிம்ஸாகரமான கர்மாவல்ல. யஜமானன் ஞானியாகவிருந்து பலத்தை உத்தேசிக்காமல் செய்தால் தேவதைகள் ஏன் திருப்தி அடையமாட்டார்கள். யஜமானன் பிராணிஹிம்ஸை செய்யவில்லையா?" என்றால் இல்லை என்றே சொல்லவேண்டும். ஹிம்ஸை சொந்தப் பிரயோஜனத்தை உத்தேசித்தும் ஹிம்ஸிக்கவேண்டும் என்கிற தமோ குணத்தினாலும் ஏற்படும். பசு மாம்ஸம் சாப்பிடவேண்டும் என்றாவது பசுவிடத்தில் த்ரோகபுத்தியால் அதை ஹிம்ஸிக்கவாவது வேண்டும்.

பலத்தை உத்தேசித்து யாகம் செய்பவன் தோஷமடை வான். दे॰भा. 1—18.

மாம்ஸபக்ஷணம் செய்யக்கூடாது என்று விதிக்கிற சாஸ்திரங்கள் மாம்ஸபக்ஷணத்திற்காக யாகம் விதிக்குமா? அதிகாரியின் லக்ஷணத்தை விசாரித்தால் ஸத்வகுணம் மேலிட்டவனும் ஜீவகாருண்யம் உள்ளவனும் தன்வானும் ஞானம் அடைந்தவனும் அதிகாரியாவான். அவனுக்குப் பசுஹிம்ஸையில் பிரவிருத்தி ஏற்படமாட்டாது. அதிக மான தனவிரயம் செய்து சாமான்களைச் சேகரம் செய்து தானும் ருத்விக்குகளும் தேஹசிரமமடையக் கர்மா செய் வது மாமஸபக்ஷணத்திற்காக ஏற்படுமா? ஆகையால் மனத்தில் பிராணிஹிம்ஸைசெய்ய எண்ணங்கொள்ளமாட் டான். அதிகாரி மனத்தில் நினைக்காவிட்டாலும் பிரத் யக்ஷமாகச் செய்யப்படும் ஹிம்ஸை ஹிம்ஸையர்காதா? கொலை செய்தவனைக் கொலை செய்யவேண்டுமென்று தண் டனை விதிக்கும் நியாயாதிபதி ஹிம்ஸை செய்ததற்குள் ளாகுவானு? பிரஜைகளை ரக்ஷிப்பதற்குத் துஷ்ட மிருகங் களை வேட்டையாடும் ராஜாக்கள் பாபம் செய்தவர்களா வார்களா? துஷ்டர்களைக் கொல்வது ஹிம்ஸையாகமாட் டாது. मोदेत साधुरपि वृश्चिकसर्पहत्या: பாகவதம் 7-வது ஸ்கந் தம் விருச்சிகமும கொடிய சர்ப்பமும் கண்ணில் புலப்பட் டால் அவைகளைக் கொலவதை ஸாதுக்கள்கூடப் பிசகர்க நினைக்கிறதில்லை. பிராணிகள் துஷ்டமானுலும் அவை களைக்கொல்ல என்ன பாத்தியம் இருக்கிறது? என்று ஆக்ஷேபிக்கலாம். சாஸ்திரத்தை விசாரித்தால் ஒருவன் கொடிய கிருத்யங்கள்செய்தால் அவன் அடுத்த ஜனமங்க ளில் தாரித்திரியத்தால் பீடிக்கப்படும் பயத்தால் பீடிக் கப்படும், திர்யகஜாதிகள் துஷ்டமிருகங்களாகவும் கெட் ட ஜந்துக்களாகவும், அநேக தடவை ஜனித்துத் துக்கம்

அநுபவித்துப் பிறகு மனுஷ்ய ஜன்மா எடுக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் அந்தப் பிராணிகளுக்குத் தேகவியோகம் உண்டாக்குவது தோஷமாகுமா? அதை விசாரித்தால் பிராணிக்கு உபகாரம் செய்ததாகத்தான் சொல்லக்கூடும். துஷ்ட ஜன்மத்திலிருந்து விடுவிப்பது சுகத்தைக் கொடுக்குமே ஒழிய துக்கத்தைக் கொடுக்கமாட்டாது. தேகத்தின் ஒரு பாகம் கெட்டுப்போனால் மனது சமாதானம் அடைய வேண்டியதற்கு அதை எடுத்துவிடும்படி வைத்தியர்கள் சொல்லுகிறதில்லையா? அவ்விதமாகத் துஷ்ட ஜந்துவின் ஸ்தூல தேகத்தைப் போக்கடித்து அதின் மனது சமாதானம் அடையும்படி செய்வது குணம்தான். பூர்வ ஜன்ம ஸ்மரணை அடைந்தும் மிருக ரூபம்கொண்ட ஜடபரதருஷிதன் தேகத்தைப் போக்கடித்துக் கொள்ளச் சிரமப்பட்டார் என்று பாகவதம் 5-ம் ஸ்கந்தத்தில் சொல்லவில்லையா? அவருக்குச் சக்தி இருந்ததால் அவ்விதம் செய்தார். சக்தியற்றவர்களுக்கு மற்றவர்கள் ஸ்தூலதேஹ வியோகம் உண்டாகும்படி செய்வது ஒத்தாசையாகும். அந்த ஜன்மம் எடுத்த ஜீவனின் முன் கர்மாவை விசாரித்தால் மற்றவர்களுக்குத் துரோகம் செய்தவனே அந்த ஜன்மம் எடுத்துத் துக்கமடைவான் என்று பாரதம் ஆநுசாஸனிக பர்வதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பாபம் நிவர்த்தியடையத் தேகவியோக உண்டாக்குவது ஒத்தாசைதான். யக்ஞத்தை உத்தேசித்து பசுக்களைச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அவைகளை வதம் செய்வது தோஷமல்லவென்று மனு, ஸ்மிருதி 'यज्ञार्थ पशवः सृष्टाः तस्मात्तेषां वधोऽवधः' அந்த ஜன்மா எடுப்பது மனுஷியர்களுக்கு பக்ஷணமாக்குவதற்குத்தானே. அவ்வித பக்ஷணமாக்காமல் தேவர்களுக்குத் திருப்தி உண்டாக்கிவைத்தால் பசுவிற்கு

நல்லகதி ஏற்படாதா? பசுக்களை ஹிம்சிப்பது முக்கிய தர்மமாகாவிட்டால் ஏன் யக்ஞபசுவிற்கு லக்ஷணம் சொல்லவேண்டும். லக்ஷணமில்லாத பசு யாகத்திற்கு உபயோகப்படமாட்டாது. தவிரவும்

यं यं वापि स्मरन् भावं त्यजत्यन्ते कलेबरम् ।
तं तमेवैति कौन्तेय सदा तद्भावभावितः ॥

ஒருவன் தேகவியோகமடைகிறானோ அந்த பாவத்திற்கு ஒத்த ஜன்மமடைகிறான் என்று கீதையிற் சொல்லப்பட்டிருக்கிறது. தன்னைக்கொல்ல நினைத்தார்கள் என்று யூகத்தில் கட்டிய பசுவிற்குத் தெரிந்த பிறகு அதற்குச் சுத்தி நடக்கும் விஷயங்களை விசாரித்தால் ஒரு பக்கத்தில் வேத மந்திரகோஷம் மற்றொரு பக்கத்தில் யஜமானும் ருத்விக்குகளும் மற்றொரு பக்கத்தில் பிராமண சமூஹம் இருக்கும் தன்னைக் கொல்லத்துணிந்த பிராமணனிடத்தில் கோபம் கொண்டு அவனையே நினைத்துத் தேகவியோகம் அஜத்திற்கு ஏற்பட்டாலும் யஜமானனுடைய குணங்களல்லவோ அந்தப் பசுவிற்கு ஏற்படும். இறக்கும் காலத்தில் வேதமந்திரங்களைச் சிரவணேந்திரியத்தில் விழ மந்திர சாஸ்திரம் அறிந்தவர்களல்லவோ அந்த மந்திரம் எவ்விதம் பசுவிற்குக் குணம் உண்டாக்கும் என்பதைப்பற்றிச் சொல்ல வேண்டும். மந்திரபலத்தால் பிராணவியோகமானாலும் ஆகலாம். இவ்விதம் கதியை அடையும் பசுவிற்கு அந்தியகாலத்தில் ஏற்படும் சித்த விருத்தி எவ்விதம் இருக்கும் என்று யாவரும் ஊகிக்கலாம். இந்த அர்த்தத்தையே அத்வர்யுயதிஸம்வாத மகாபாரதம் அசுவமேத பர்வம் 28 அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜீவர்களுக்கு இரண்டு ரூபம். அழிவற்றது ஒன்று அழிவுடையது ஒன்று. அழிவற்றது எப்பொழுதும் சாஸ்வதமாகவே இருக்கும். நாசமடைவது எப்பொழுதும் நித்

தியுமில்லை. அழிவடையக்கூடிய ஸ்தூல தேகத்தை நிவர்த்தித்து லிங்க தேகத்திற்கு நல்லகதி உண்டாக்கிவைப்பது தோஷமல்ல. மனுஷியர்கள் அவ்விதம் செய்யலாமா? வியவாஹாரத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு கர்மாவிலும், அறியாமலே ஜீவஹிம்ஸை ஏற்படுகிறது. அதை நிவர்த்தி செய்துகொள்ள "பஞ்சஸூனை நிர்ஹாரணார்த்தம்" நித்திய கர்மாவாகிய பஞ்சயக்ஞம் விதிக்கப்பட்டிருக்கிறதே. தேகத்தில இவ்வித தோஷம் ஏற்பட்டிருப்பதால் முடிவில் அக்னியில் ஒப்பிவித்து தோஷம் நிவிர்த்திக்கப்படும் என்று தேகத்தை அக்னியில் தஹித்துவிடுகிறார்கள். பசுமந்தரபலத்தால் பசுவின் இந்திரிய பிராணங்கள் தங்கள் உற்பத்தி இடத்திற்கு அனுப்பப்பட்ட பிறகு மீதியாவது காஷ்டம். அக்னி தஹனத்திற்குத்தான் யோக்கியம். இந்த நிலைமையில் அதை ஹிம்ஸிப்பது உண்மையாகமாட்டாது. யாகத்தில் பசுவை ஸ்நானம் செய்துவைத்து மந்திரத்துடன் யூபத்தில் கட்டுவதைப் பார்த்த ஒருயதி அத்வர்யுவை ஹிம்ஸிக்கலாமா என்று கேட்டார்.

அத்வர்யு—இந்தப் பசு நாசம் அடைகிறதில்லை. வேதம் சொல்வது வாஸ்தவமானால் பசு நல்லகதி அடைகிறது. பசுதேகத்தின் பார்த்திவாம்சம் பூமியிலும் ஜலாம்சம் ஜலத்திலும், நேத்ரம் சூர்யனிடத்திலும், சுரோத்ரம் திக்குகளிலும், பிராணன் ஆகாசத்திலும் சேர்ந்துவிடும். நான் ஹிம்ஸிக்கவில்லை.

யதி—பசுவிற்கு நல்லகதி ஏற்பட்டால் உமக்கு என்ன பிரயோஜனம். அந்த பசு ஸ்வதந்தரனல்ல. அவனுடைய பந்துக்களின் அனுமதியின் பேரில் செய்யும் ஜீவர்களை ஹிம்ஸிக்கக்கூடாது என்று வேதம் சொல்ல இவ்விதம் செய்யலாமா. பிரத்யக்ஷத்தைத் தான் நாம் பார்க்கவேண்டும். மறு உலகத்தைப் பார்த்தது யார்;

அத்வர்யு—நீர் முகரும் கந்தம் பூமியிடத்திலிருந்தும், அனுபவிக்கும் ரஸம் ஜலத்திலிருந்தும், பார்க்கும் வர்ணம் தேஜஸ் உள்ள பிராணிகளிடத்திலிருந்தும், கேட்கும் சப்தம் ஆகாசத்திலிருந்தும், நினைக்கும் எண்ணம் மனதிலிருந்தும் எடுக்கவில்லையா? நீர் அவைகளை ஹிம்ஸிக்காமல் வியவஹாரம் செய்யுமே. நீர் ஹிம்ஸை செய்கிறீர். சலிப்பதுகூட ஹிம்ஸை உண்டாக்கக்கூடிய கர்மா அல்லவா?

யதி—ஜீவனுக்கு இரண்டு ரூபம்—அழிவற்றது அழிவுடையது. அழிவற்றது எப்பொழுதும் சாசுவதம்; நாசமுடையது எப்பொழுதுமில்லை. பிராணன் முதலிய கர்மேந்திரியங்கள், ஜிஹ்வா முதலிய ஞானேந்திரியங்கள், மனது முதலிய அந்தக்காணம் ஸத்வம் முதலிய சுகம் ரஜஸ் முதலிய துக்கங்கள் இவைகளிடத்தில் பக்துதலில்லாமல் த்வந்த்வஸஹனம் செய்து ஆசையற்று எல்லா பிராணிகளையும் சமபுத்தியாகப் பார்ப்பவன் இந்திரிய நிக்ரஹம் செய்தவன், பாபம் செய்யமாட்டான் என்று பதில் சொல்ல அத்வர்யு சந்தோஷமடைந்து வித்வான்கள் மந்திரபலத்தால் நான் செய்ததுபோல யாகம் செய்ததை நம்பினேன். இப்பொழுது எனக்கு ஞானம் உண்டாகிவிட்டதென்று சொன்னார் தேவிபாகவதம் 1 ஸ்கந்தம் 18 அத்தியாயம்.

"हिंसा यज्ञेषु प्रत्यक्षा साऽहिंसा परिकीर्तिता ।
उपाधियोगतो हिंसा नान्यथेति विनिर्णयः ॥
यथा चेन्धनसंयोगादग्नौ धूमः प्रवर्तते ।
तद्वियोगात्तथा तस्मान्निर्धूमत्वं विभाति वै ॥
रागिणां सापि हिंसैव निःस्पृहाणां न सा मता ।
अरागेण च यत्कर्म तथाऽहंकारवर्जितम् ॥

अकृतं वेदविद्वांसः प्रवदन्ति मनीषिणः ।
साऽहिंसैव महाभाग मुमुक्षूणां जितात्मनाम् ॥

யாகங்களில் பிரத்யக்ஷமாக செய்யப்படும் பசுஹிம்ஸை ஹிம்ஸையாகமாட்டாது. பலாஸக்தி அதாவது ஆசையெனகிற உபாதியுடன் செய்யப்பட்டால் அது ஹிம்ஸையாகும். விறகு சம்பந்தம் ஏற்பட அக்னியில் தூபம் உண்டாகிறது. விறகு ஸம்பந்தமில்லாவிட்டால் தூபம் ஏற்படுமா? வேதோக்த கர்மா ஆஸக்தி உள்ள புருஷனுக்கு ஹிம்ஸையாகலாம். ஆஸக்தியற்றவனுக்கு இல்லை. ஆஸக்தி இல்லாமலும் அஹங்காரமில்லாமலும் எந்தக் கர்மா செய்யப்படுகிறதோ அந்தக் கர்மாவை அவன் செய்ததாக ஏற்படமாட்டாது. ஆஸக்தியுள்ள கிருஹஸ்தன் செய்யும் கர்மாவால் ஹிம்ஸை உண்டாகும். முமுக்ஷுவான ஜிதேந்திரியர்களுக்கு அது ஹிம்ஸையாகமாட்டாதென்று ஜனகர் சுருக்கி உபதேசம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட காரணங்களால் பிராணிஹிம்ஸை செய்வதற்கு யாகம் ஏற்படவில்லை. தேவதைகளைத் திருப்தி செய்விக்க ஏற்பட்ட கர்மம விதிப்படி யாகம் செய்வதால்

"यज्ञेन लोका विमला भन्ति । यज्ञेन देवाऽमृतत्वमाप्नुयुः । यज्ञेन पापैः । बहुभिर्विमुक्ताः प्राप्नोति लोकाः परमस्य विष्णोः"

யஞ்ஞம் செய்வதால் மனது சுத்தப்பட்டு உலகத்திலுள்ளவர்கள் சுத்தர்களாகிறார்கள் யஞ்ஞம் செய்வதால் தேவர்கள் மரணமற்ற பதவியை அடைந்தார்கள். யஞ்ஞத்தால் பாபத்திலிருந்து விடுபட்டு விஷ்ணுலோகத்தை அடைவிப்பது யாகம. இந்த யாகத்தைச் சொல்லிய விதிப்படி செய்பவன நல்ல கதியை அடைவதுடன பசுவிற்கும் நலலகதி உண்டாகிறது. வேதததில் விதிக்கப்பட்டிருக்கும் யாகங்

களில் அசுவமேதயாகம் முக்கியமானது. சத்துரு ராஜாக்கள் ஜயிக்கக்கூடிய சக்கரவர்த்தி தான் அதற்கு அதிகாரி. இப்படிக்கு இருக்கையில் சத்துருக்களை ஜயிக்கச் சக்தியற்ற ராஜாக்களும் அதற்கு அதிகாரியாக பிராமணர்களுக்கும் அசுவமேதம் விதிக்கப்பட்டதற்குக் காரணம்.

ஜந்மாந்தரத்தில் பிரஜாபதி அசுவமேதயாகம் செய்து அதின் பலத்தால் ஹிரண்யகர்ப்பனானர். முன் ஜன்மத்தில் செய்த யாகத்தைக்காட்டிலும் விஸ்தாரமாக செய்ய இச்சித்தார். ஸாதனமில்லாமல் சிரமமடைந்தார். தபசு செய்தார். இவைகளால் அவர் பிராணன் வெளிப்பட தேகம் சவம்போலாய்விட்டது. அதைப்பார்த்து மனதினால் அதிற்பிரவேசிக்க அது பரிசுத்த அசுவமாயிற்று. ஒரு ஸம்வத்ஸரம் ஸஞ்சாரம் செய்து பிறகு ஆத்மாவிடத்திற் செலுத்திவிட்டார் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணுவை உபாஸிக்கவேண்டுமானால் சாளக்கிராம பிரதிமை முதலியவைகளில் விஷ்ணு புத்தி வைத்து உபாஸிப்பதுபோல அசுவத்தில் பிரஜாபதி புத்தி வைத்து காலலோக தேவதா ரூபமாகத் தியானம் செய்ய வேண்டும். அதிகாரிகள் கர்மாவின் பிரயோகத்தைச் செம்மையாக அறிந்து செய்தால் பலத்துடன்கூடியதாகும். அசுவத்தின் அவயவங்களின் காலாதிதிருஷ்டி வைக்கவேண்டும். அதிகாரி இல்லாதவர்களுக்கு அசுவமில்லாததினால் தன் ஆத்மாவை அசுவமாக கல்பித்து தன் சிரஸ் முதலிய அவயவங்களைக் காலாதி திருஷ்டி ஏற்படுத்திப் பிரஜாபதித்வத்தை அடைந்து தான் பிரஜாபதி என்று ஞானம் அடைந்து அந்தப் பதத்தை அடைகிறான்.

அசுவத்தின் தேஹத்தைக் காலதேவதா ரூபமாகத் தியானம் செய்வதில் அசுவத்தின் சிரஸ் பிராமம் முஹூர்த்தம் என்று சாஸ்திரிய லௌகிக வியவஹாரத்தில்

சொல்லப்படும். காலம் உஷஸ் சிரஸ் முக்கியமான அவயவம். கால அவயவங்களில் உஷஸ் பிரதானம். காலாவயவத்தில் தேகத்தின் உஷஸிற்குப் பிறகு சூர்யோதயம். சிரஸுக்கு அடுத்த அவயவம் சக்ஷுஸ் அவயவம். சக்ஷுஸ் சூரியாதிஷ்டாதா. அசுவ பிராணனிடத்தில் வாயு திருஷ்டி சலனசுவாஸம் உள்ளது. திறந்தவாய் வைசுவானரர்களின் "अग्निर्वाग्भूत्वा मुखं प्राविशत्" சரீரத்தில் ஸம்வத்ஸர திருஷ்டிகாலா அவயவங்களில் ஸம்வத்ஸரம் ஆத்மா லோக திருஷ்டி பிருஷ்டம் த்யுலோக் உதரம் அந்தரிக்ஷலோகம் உபயபார்சுவங்களில் 4 திக்குகளின் திருஷ்டி பார்சுவம் 2 எவ்விதம் 4 திக்காகும்? ஸர்வ மூலமாகயிருப்பதால் 4 பார்சுவங்கள். பார்சுவத்தில் உள்ள அஸ்தி ஆக்நேயாதி 4 திக்குகள். ருதுக்கள் ஸம்வத்ஸரத்தின் அவயவம் போல் தேஹத்தின் அவயவங்கள் ஹஸ்தாதிகள் ஸம்வத்ஸரத்திற்கு ஸந்திகள் மானங்கள் அர்த்தமானங்கள் பர்வங்கள் பாதங்கள் அஹோராத்திரம் பிரஜாபதிக்கு 4 யுகஸஹாஸம் தேவர்களுக்கு அயனங்களும், பிதிருக்களுக்கு பக்ஷங்களும், மனுஷியர்களுக்கு 60 கடிகைகளும் அஹோராத்திரம். எலும்புகளில் நக்ஷத்தர திருஷ்டி (எலும்பு வெளுப்பாக இருப்பது காரணம்) நபஸ் மாம்ஸம் (ஆகாசத்திலிருந்து மேகங்கள் ஜலத்தை வர்ஷிக்கிறது. மாமிஸத்திலிருந்து உதிரம்) ஔஷதிகள் வோமங்கள் குதம் ஷிந்துக்கள் இவ்விதமாக அசுவாவயவங்களைக் காலத்திருஷ்டியாகத் தியானம் செய்வதால் அசுவமேதயாக பலன் தான்விருட் என்று அறிந்துகொண்டு முக்தி அடைகிறான். யாகங்களின் ரஹஸ்யார்த்தம் இவ்விதமிருக்கையில் அதை விசாரிக்காமல் மனதுக்குத் தக்கபடி யுக்தி ஏற்படுத்தி யாகத்தைத் தூஷிக்கிறார்கள்.

பி. வி. கிருஷ்ணஸாமி அய்யர்.

கர்மம்.

(முன்தொடர்ச்சி.)

அதுபோல் பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரனென்ற பெயர்பெற்ற தேகத்திலபிமானம் நமக்கேற்பட அததற்குத் தக்கவாறு பற்பல கர்மபேதங்களை நமது வேதமாதா கொடுத்திருக்கும்போது நாமவ அஸ்தத் தள்ளமுடியும். ஆதல்பற்றியே புஷ்பம் நழுவுவது போல் அது நழுவும் என்றார். ஆனால் त्याज्यं दोषवदित्येके कर्म प्राहुर्मनीषिण: என்று கீதையில் எப்படிக் கூறினர் எனலாம். அது ஸித்தாந்த வாக்கிய மன்று. निश्चयं शृणु मे तत्र त्यागे भरतसत्तम என்று ஆரம்பித்து यज्ञदानतप: कर्म न त्याज्यं कार्यमेव तत् யக்ஞம், தானம், தபஸ், கர்மம் இவைகளை விடவேகூடாது. அவைகளைச் செய்யத்தான் வேண்டும் என்றார். இதிலும் ஓர் அழகைக் கவனியுங்கள். கர்மம் என்ற ஒரு சொல்லாலேயே யக்ஞம் தானம் இவைகளும் கிரகிக்கப்பட்டதாகவே ஆகும். அப்படியிருக்க அவைகளைத் தனியாய்க் குறித்தார். இதன் கருத்து இது. கர்மம் என்ற சொல்லால் யக்ஞம் முதலியவைகளைக் குறிப்பிடுவது போதாது. ஏனெனில் அவைகள் மிக அத்யாவசியமானது. அவைகளைக் கட்டாயம் செய்தே தீரவேண்டும் என்பதே. ஆகவே வேதத்திற் கூறப்பட்ட விசேஷ தர்மமும் ஸாமான்ய தர்மமும் விடத்தக்கனவல்லவென்பதே பொருள். இனி सर्वधर्मान् परित्यज्य என்பதன் பொருள் யாதென்றால் இங்கு சற்று கவனியுங்கள். எல்லா தர்மங்களையும் விட்டுவிட்டு என்னை ஒருவனைச் சரணமடைவாய். எல்லா தர்மங்களையும் புண்ய பாபம் முதலிய ஸமுஸ்தகர்மத்தையும் விட்டு

உடனே என்னை அடை என்றேற்பட்டது. பரித்யஜ்ய விட்டு என்று சொல்லிவிட்டுச் சரணமடை என்று வினையில் முடித்தார். இதனால் புண்யாபுண்ய தர்மங்களை விடுவது ஒருகாலமென்றும் ஈசனைச் சரணமடைவது இன்னொருகாலமென்றும் பொருளல்ல. எவ்விதமெனின் "நின்று பாடுகிறாள்" என்றவிடத்தில் நிற்பதற்கும் பாடுவதற்கும் இடையில் வேறுகாரியம் கொஞ்சமளவும் இல்லையோ, அதுபோலவே இங்குமெனக் கொள்ளுங்கள். இதன் கருத்து என்ன ஏற்பட்டதென்றால் ஒரு காரியத்திலும் வாக்கு மனம் சரீரம் மூன்றையும் கொஞ்சமும் செலுத்தாமல் பரமாத்மபாவனையே செய்துகொண்டிரு என்பதே. இப்படிச் செய்ய சக்திவாய்ந்தவனுக்குக் கர்மங்கள் எதற்கு? ஆகவே இந்தச் சுலோகத்திற்கு நாம்மேலாழ்ந்தபடி அர்த்தம்கொள்வது அழகல்ல. இனி இவ்வுலகினில் கிருஷி முதலிய கர்மங்களுக்குக் கொஞ்ச காலத்திற்குள்ளேயே பலனை அடைவதுபோல் சாஸ்திர கர்மாக்களுக்கும் இம்மையில் பலனைக் காணோமே. மறுமையிலும் பலனடைந்தவனாக ஒருவனும் நேரில் வந்துசொல்லவில்லையே. ஆகவே இக்கர்மத்தை எப்படி நம்புவது என்கிறீர்கள்? இதுவும் உசிதமல்ல. ஏனெனில் இம்மையில் பலனை அடையக்கூடிய கர்மங்களும் நமக்குப் பல இருக்கின்றன. புத்திரகாமயாகம் காரீரி இஷ்டி என்ற காம்ய கர்மங்கள்தான் அவைகள். பிறகு நித்யகர்மமும் நைமித்திக கர்மமும் இவ்வுலகினில் இப்போதே பலனைக் கொடுத்துவிடாது. மற்று அவை அடுத்த ஜன்மத்தில்தான் தரும். அதை நாம் எப்படி நம்புவதென்றால் அதை நம்பச்செய்வதற்கு ஜன்மாந்தரமென்ற அடுத்த விஷயத்தில் விசேஷமாய்ப் பேசுவோம். ஆயினும் இப்போது சுருங்கச் சொல்லின் அது உண்டென்றே சொல்லுகிறேன். எப்படியென்றால் இந்த ஜன்மத்தில் யாம் செய்கின்ற தீத்தொழிலுக்கும் நற்

றுழிலுக்கும் இப்போது பலன் அடையமாட்டோம். பாருங்கள்; உலகினில் மிகத் தீத்தொழில் புரிந்து ஜீவிப்பவன் சுகியாய்க் காலம் கழிக்கிறான். சாஸ்திரத்தைவிட்டு வழுவாதவன் மிகக் கஷ்டதசையை அடைகிறான். இதைப் பார்த்து நாம் கெட்ட தொழிலும் அந்யாயமும் செய்பவன்தான் சுகமாய்ஜீவிப்பான் என்று கொள்ளலாம். இவைகட்கு அவன்செய்யும் இப்போதைய கர்மமல்ல. மற்ற இதற்கு முன் செய்த கர்மமே காரணம். அதனால்தான் தாரதம்யமான பலவகைச் சிருஷ்டிக்கு ஈசன் பாத்தியப்பட்டவனல்ல. ஆகவே கர்மம் ஜன்மாந்தரத்தில் அவசியம் பலனை அளிக்கும் தன்மை பொருந்தியதென்றே கொள்வோம். இனி போதாயனரே தேசம்தோறும் கர்மம் வேறென்று சொல்லிவிட்டாரே என்கின்றனர். அதுவும் சரியல்ல. போதாயனர் அந்தவிடத்தில் அதை விதிவாக்கியமாய் விதித்தாரில்லை. மற்று லோகத்து நடத்தையைப் பார்த்து அனுவதித்தார். அதற்கு அனுவாதக வாக்கியமென்று பெயர். விதி வாக்கியமென்பது மூன்று பிரிவினையுடையது. அதாவது அபூர்வவிதி, நியமவிதி, பரிஸங்கியாவிதி என்று. இம்மூன்றிலும் இது சேராது. ஆகவே அவரது காலத்திற்கும் அனாதி காலமாய் அனுஷ்டிக்கப்பட்டு வெறுக்கப்படாமல் ஸர்வஸகஜமாய் நடக்கும் அக்கர்மங்களை அவ்வத்தேயத்திற் கண்டு உலகத்தையும் அத்தகைய பெரியோர்களையும் ஒருவாறு பழித்துக் கூறிச் சகியாத அம்முனி அதை எடுத்துச் சொன்னதோடு பச்சாத்தாபத்துடன் இவ்வனியாயங்கள் அங்கங்கே இருக்கட்டும். மற்ற தேயத்தவர்கள் இனிப் புதிதாய் இதைக் கையாட ஆரம்பித்தால் அவர்கள் பாபிகளென்று மனம் நொந்து அனுவதித்தாரே தவிர இது சாஸ்திர சம்மதமென்றாவது இது புண்யப் பிரதம் என்றாவது எண்ணிக் கூறினாரில்லை. அதுசொன்னதே ஆரம்பத்திலேயே, பஞ்சதா விப்ரதிபத்திः ஐந்து

விதஅக்கிரமங்கள் என்றாரம்பித்தார். ஆதல்பற்றியே இவர் இன்னோரிடத்தில் देशजातिकुलधर्माश्चाम्नायैरविरुद्धाः प्रमाणं. தேசதர்மம், ஜாதிதர்மம், குல தர்மமென்பதெல்லாம் வேதத்திற்கு முரணுக்ரமவிருந்தால் பிரமாணமாகும் என்றார். ஆதல்பற்றி இதை யாம் விசேஷ ஸாதகமாய் வைத்துக் கொண்டு வியவகரிப்பதே தப்பு என்று இதனை விடுவாம். இனி இவ்விஷயத்தில் மிகவும் ஆராயப்புகுந்து நாத்திக வாதம் கூறுவது அவ்வளவு அழகல்ல வாதல்பற்றி ஆஸ்திக புத்தியுடன் இதனை ஏற்றுக்கொண்டு மேல் விஷயத்திலிரங்குவாம். இக்கர்மம் பொதுவாய்ப் புண்ய கர்மமென்றும் பாபகர்மம் என்றும் இருவகைப்படுமென்றும் அவைகளும் பிராரப்தம் ஆகாமி ஸஞ்சிதம் என மூவகைப்படுமென்பதும் ஆஸ்திகர்களால் அறியப்பட்டதே. இதில் பிராரப்தமென்பது இப்போது நம்மாலனுபவிக்கப்பட்டுவரும் புண்யபாபகர்மமே. ஆகாமியென்பது இனி அடுத்துவரக் காத்திருப்பது. ஸஞ்சிதமென்பது முன் ஜன்மத்தில் செய்யப்பட்டு பிராரப்தத்தில் இறங்காமலும் ஆகாமியைப் பின் தொடராததுமான கர்மம். இவ்விஷயத்தைப்பற்றி விரித்துச் சொல்வது இப்போது அவகாசமல்ல. ஆயினும் இதின் விரிவைப்பற்றி அடுத்துவரும் ஜன்மாந்தரமென்னும் விஷயத்தில் விரித்துரைக்கின்றேன்.

இனி புண்யபாப கர்மத்தில் சிலருக்குண்டாம் சந்தேகங்களைக் கவனிப்பாம். சிலர் புண்யத்திற்கும் பாபத்திற்கும் ஒன்றுக்கொன்று விரோதமுண்டு. ஆதலால் புண்யம் செய்யப்படும்பொழுது பாபம் கொஞ்சம் கலந்தால் புண்யத்தை அது தொலைத்துவிடும். அதுமாதிரி ஏராளமாய்ப் புண்யம் நேரும்போது பாபமும் தொலையலாமென்று நினைக்கிறார்கள். அதற்கு ஒத்ததாகவே நாம் ஒவ்வொரு கர்மாவின் ஆரம்பத்திலும் ஸங்கல்பம் செய்யும்போது 'समस्त-

दुरितक्षयद्वारा ஸமஸ்த பாபங்களும் நீங்குவதோடு என்று சொல்கிறோம். ஸந்தியாவந்தனமும் ஒவ்வொரு நாளும் செய்யும் பாபத்தைத் தொலைத்துவிடுகிறது என்றே இருக்கிறது என்கிறார்கள். இது உண்மையே. ஆனால் எல்லாவித மான பாபங்களையும் எல்லாப் புண்யங்களும் போக்கி விடாது என்று சொல்லவேண்டும். போக்கிவிடுமென்றுங் கூறல்வேண்டும். இதெவ்விதமெனின் நாம் செய்யும் பல வித பாப கர்மாக்களுக்குச் சாஸ்திரங்கள் பலவிதமான பிராயச்சித்தங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதாவது தேசாந்திரங்களுக்கு ஸமுத்திரத்தைக் கடக்கக் கப்பலாற் போகக்கூடாதென்று சாஸ்திரம் தடுக்கிறது. அத்தகைய் கர்மாவை ஒருவன் செய்திடின் அவனுக்கு சாஸ்திரத்தை மீறின குற்றமென்னும் பாபம் ஒன்று அதன் மூலம் பல வித பாபங்களும் நேருகின்றன. இவைகளைத் தொலைப்ப தற்கு ஓர்வித பிராயச்சித்தமுண்டு. இதுபோலவே பிர்ம ஹத்யா முதலிய பாபங்களுக்கும் பிராயச்சித்தங்கள் கூறப் பட்டிருக்கின்றன. இவைகளால் அத்தகைய பாபங்கள் போய்விடுகின்றனவென்பதே ஸித்தாந்தம். ஆனால் போகா தென்பது எவ்விதமென்றால் ஓர் பாபத்தை ஒருவன் பாப மென்று தெரிந்துகொண்டே குதூகலத்துடன் செய்து பிறகு பிறாது உபத்திரவத்திற்காகமட்டிலும் சிரத்தை யின்றி எவ்வளவு பொருள் செலவு செய்துகொண்டு பிரா யச்சித்தம் செய்துகொண்டாலும் அது அணுவளவேனும் நீங்காதென்பதே திண்ணம். மற்று அவன் பிராயச்சித் தத்தைச் செய்துகொண்டேனென்று சொல்லிக்கொண்டு ஸாதுக்களோடும் சேர்ந்து அவர்களையும் கெடுத்து அதனை லேற்பட்ட பாபத்தையும் விசேஷமாய்ப் பெறுகிறான். மற் றும் புண்யபாபங்களுக்குள் பாபத்திற்கே புண்யத்தைக் கெடுக்கும் பலம் அதிகம். பாபத்தைத் தொலைக்க ஏராளமான புண்யம் சேரவேண்டும். உலகினிற் பாருங்கள். ஒரு குட்டம்

பாலைக் கெடுக்க ஒரு சொட்டு விஷம்போதும். ஆதல்பற்றியே புண்யத்தை வெகு ஜாக்கிரதையுடனும் சிரத்தையுடனும் செய்யவேண்டுமென்கிறார்கள். இன்னும் பாருங்கள். ஒரு மனிதன் திவ்யமான கிருகத்தைக் கட்டிக்கொண்டு சுத்தமான காற்றையே ஸேவித்துக்கொண்டு சுகமாய் நிரம்பகாலமிருக்கிறான். அத்தகையோனுக்கு அகஸ்மாத்தாய் ஒரு நிமிஷம் எங்கேயாவது கெட்ட காற்றை உட்கொள்ள நேரிட்டால் உடனே அவனது சரீரத்தைக் கெடுத்துத் தலைவலி முதலிய சிறு ரோகங்களை உண்டுபண்ணி விடுகின்றது. இவ்விதம் எத்தனையோ திருஷ்டாந்தங்களை உலகினிற் காணலாம். அதுபோல் புண்ய கர்மாவைப் பாப கர்மம் கெடுப்பதுபோல் பாபகர்மாவைப் புண்ய கர்மம் தொலைக்கமுடியாதுபற்றிப் புண்ய கர்மத்திலேயே எப்போதும் மனத்தைச் சலிக்காமல் நிலைநிறுத்தவேண்டும். அப்படியே அப்பியஸிக்க வேண்டுமென்றும் சாஸ்திரங்கள் கதறுகின்றன. ஆதல்பற்றியே நமது முன்னோர்களை பாப-பீரு அதாவது பாபத்திற்குப் பயந்தவர்கள் என்று சொல்வதுண்டு. ஆதலாற்றான் நம் பெரியோர்கள் புண்யமென்பது நமது இஷ்டப்படிதானென்று இப்போதிய நம்போன்றவர்கள் துணிந்துகொள்வதுபோல் கொள்ளாமல் சாஸ்திரங்களிற் கூறப்பட்டவைகள்தான் புண்யம் என்றும் சாஸ்திரங்களில் விலக்கப்பட்டவைகள்தான் பாபமென்றும் நம்பி அப்படியே அனுஷ்டித்துவந்தார்கள். இது நம் பெரியோர்கள் பயத்தினால் அனுஷ்டித்து வந்ததல்ல. இவ்விதமே பகவானும் கீதையிற் கூறியுள்ளார்.

> तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
> ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥

ஆதல்பற்றி ஓ அர்ஜுனா, காரியம் இன்னதென்றும் அகாரியம் இன்னதென்றும் வரம்புகட்ட சாஸ்திரங்களிற் கூறப்

பட்டிருக்கும் விதியை நன்கறிந்துகொண்டு அதன் பிறகு இவ்வுலகினில் நீ கர்மத்தை நடாத்தக் 'கடவாய்" என்றார். இவ்விதமிருக்க நாமே எவ்விதம் ஓர் கர்மத்தை நற்கர்மமென்றும் இல்லையென்றும் தீர்மானம் செய்யமுடியும். ஸாக்ஷாத் கிருஷ்ணபகவானையே தேரோட்டியாய்ப் பெற பாக்கியம்பெற்ற அர்ஜுனனே ஓர் சமயம் நேர்ந்த ஆகந்துகசோக மோகத்தினால் சாஸ்திரத்தின் வழி தெரியாது தடுமாறி நின்றானென்றால் ஈசனையே இருக்கிறனா இல்லையாவென்று சந்தேகம் கொண்டு கொஞ்சநேரம் நாஸ்திகன்போலவும் நிமிஷநேரம் ஆஸ்திகனபோலும் வேஷம் பூண்டு எப்போதும் சோகமோகத்திலேயே ஆழ்ந்தித் தத்தளிக்கும் நமக்கா கர்மத்தின் ஸ்வரூபம் தெரியப்போகிறது. இதை யறியாமலா गहना कर्मणो गतिः என்றார். यदह्नात् कुरुते पापं तदह्नात् प्रतिमुच्यते எந்தப் பகலில் என்னபாம் செய்யப்படுகிறதோ (அது பிராத ஸந்தியாவந்தனத்தினால்) தொலைந்துவிடுகிறதென்று வேதம் கூறுவது பொய்யோவெனில் அது பொய்யல்ல. உண்மையே. ஆனல் ஒரு மனிதன் பிரம்மஹத்தி, கோஹத்தி முதலியன கொடும் கர்மாக்களைச் செய்துவிட்டுத் ஸந்தியாவந்தனம் செய்துவிட்டாற் போதுமோவென்றால் அவை அசையமாட்டா. மற்று அல்பமாயும் நமக்குத் தெரியாமற் செய்யப்பட்டதுமான பாபங்களெல்லாம் விலகுமென்பது பொருள். பாபம் புண்யமென்பதை நாம் நிச்சயம் செய்ய வல்லவரல்லவென்பதை ராமாயணத்தில் வாலிவதத்தின் மூலமறியலாம். எவ்விதமெனின் ஸ்ரீராமபிரான் வாலியை வதை செய்தவிடத்தில் மறைந்திருந்து அடித்தது ஒரு குற்றமென்கிறார்கள். இது குற்றமல்லவென்று மட்டிலும் பெரியோர் ஊகித்துக்கொள்கின்றனர். ஏனெனில் அடிபட்டுவிழுந்த வாலி முதலில் ராமனைக் கண்டவாறு திட்ட ஆரம்பித்தான். அதையெல்லாவற்றையும் கேட்டபின் அம்பகான் வாலியும்

தான் செய்தது தப்பிதமென்றும் ராமன் செய்தது சரியென்றும் மனதார ஒப்புக்கொண்டான். ஆனால் அந்த ஸர்க்கத்தைப் படிக்கிற நமக்குமட்டிலும் இன்னும் தெளிவு ஏற்படுகிறதில்லை. அதுகொண்டு பாபகர்மம்தானென்று சொன்னால் அது நமக்கே பாபமாய் முடியும். மற்றும் இந்திரஜித்தை வதம்செய்யும்போது லக்ஷ்மணன் பாணத்தை அம்பிற் பூட்டி

धर्मात्मा सत्यसन्धश्च रामो दशरथिर्यदि
पौरुषे चाप्रतिद्वन्द्वस्तदैनं जहि रावणिम् ॥

ராமன் தர்மாத்மாவாயும் ஸத்தியஸந்தனாகவும், தசரதனது புதல்வனாகவும், பராக்கிரமத்தில் நிகரற்றவரென்று இருப்பது உண்மையாயின், ஏ பாணமே, இந்த ராவணியைக்கொல் என்று விட்டதாகவும் அக்கணமே அவனது தலையை அது அறுத்து வீழ்த்தியதென்றும் சொல்லியிருக்கிறது. இதனாலும் நாம் அறிவதென்னவென்றால் ராமரிடத்தில் எள்ளளவேனும் குற்றமில்லையென்பதே. ஏனெனில் முதலில் धर्मात्मा என்றே சொன்னார். இதையே தர்மதேவதையும் ஒப்புக்கொண்டது. ஆகவே புண்ய பாபம் முதலிய கர்மத்தை நாம் மனம்போன போக்காய்ச் செய்யாமல் சாஸ்திரத்தைமட்டிலும் நம்பி ஈசனது கட்டளையென்று செய்து வந்தால்தான் நமக்கும் நம்மினத்தாருக்கும் நம் லோகத்திற்கும் க்ஷேமம் உண்டாகுமே யொழிய நமது அகங்காரத்தினாலும் கொழுப்பினாலும் ஒருகாரியமும் நடவாதென்பதைத் திண்ணமாய் நம்பி ஈசனை சரணமடைவீர்களாக. இவ்விஷயத்தில் இம்மட்டோடு நிறுத்திக் கொள்வதனால் இவ்விஷயம் இவ்வளவுதானென்று எண்ணவேண்டாம். மற்று தற்போது என் புத்தி இவ்வளவுதான் பிரவர்த்தித்ததென்பதை நம்புங்கள்.

ब्रह्मा येन कुलालवन्नियमितो ब्रह्माण्डभाण्डोदरे
विष्णुर्येन दशावतारगहने क्षिप्तो महासङ्कटे ।

रुद्रो येन कपालपाणिपुटके भिक्षाटनं सेवते
सूर्यो भ्राम्यति नित्यमेव गगने तस्मै नमः कर्मणे ॥

யாதொருகர்மாவினல் பிர்மமாவர்னவர் பிர்ம்மாண்டமென்கிற பாண்டத்தின் மத்தியில குயவனைப்போல் நியமிக்கப்பட்டிருக்கிறரோ, விஷ்ணுவானவர் யாதொரு கர்மாவினல் மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதான பத்து அவதாரமெனகிற அரண்யத்தில தள்ளப்பட்டிருக்கிருரோ, யாதொரு கர்மாவினல் ருத்திரரும் தன்கையில் மண்டையோட்டைத் தரித்துக்கொண்டு பிக்ஷாடனத்தைச் செய்கினருரோ, எதினல் சூரிய பகவான் ஒவ்வொரு தினமும் ஆகாயத்தில் சுற்றுகினருரோ, அவ்வித மகிமை பொருந்திய கர்மாவையும்பொருட்டு நமஸ்காரம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

பக்தி.

(முன்தொடர்ச்சி.)

மணிகளை யடையவேண்டி யொருவன் சமுத்திரத்தைச் சேர்வானுயின், அதிலிருக்கும் முதலை முதலிய கொடிய ஜந்துக்களால் எவவிதம் பயத்தையடைவனே அத்தன்மைபோல் அரசனிடஞ் செல்லுமொருவன் அவன் என செய்யுமோ வென்று நடுக்கமேயுண்டாகும். இதனை ஔவையார் "ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே" ஆற்றங்கரை

யிலிருக்கு மொருமரம் எங்ஙனம் பிரவாஹத்தில், அழுந்தி விடுமோவென்று மரத்தினடியில், மண்ணைக் கொட்டி கெட்டிப்படுத்துவதுபோல் அரசாறிய வாழ்ந்தால் எக்காலமரசனுக்கபசாரம் நேருமோவென்று பயந்தே தீரவேண்டும். ஆதலாற்றான் "அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்" என்றம் பழமொழியும் விளங்குகிறது. அரசனிடமன்பு பாராட்டாவிட்டால் பரலோகத்தில் நரகமும் இங்கு தண்டனையும் கிட்டுமென்பது திண்ணம். ஆதலால் அரசனிடமன்பு பாராட்டி அன்னவர்க்கு நம்மால் செய்யக்கூடிய உபகாரங்களைச் செய்வதாலும் அவ்வரசன் குடிகளிடம் அன்பு பாராட்டி நலம்புரிவதாலும் உலகம் க்ஷேமமாயிருக்குமென்பது வித்தம்.

தெய்வபக்தி:—நம்மவருள், ஒவ்வொருவர்க்கு மிஷ்டதேவதைகள் பலவாயிருப்பதால், அந்தந்த தெய்வங்களிடமவரவர்கள் பக்தி மிகுந்த பக்தர்களாயிருக்கிறார்களென்பது நிச்சயம். அதிற் சிலர் தாம் வழிபடுந் தெய்வமே மேம்பாடுடையதென்று கூறுவதோடு, இதர தெய்வங்களைத் தூஷிப்பதையும் மிகவும் காண்கிறோம். அவ்வாறு நிந்தனை செய்வது எத்தகைய பாபத்தை விளைக்குமென்பதைச் சிறிது புத்தி பூர்வகமாயாராய்ச்சி செய்தால், கரபதரஸமாநம். நம்மவருள் ஒருவன் மேன்மையிலிருக்கவும் மற்றொருவன் தாழ்மையிலிருக்கவும் காண்கிற நமக்கு, ஏனவ்விதமிருக்கவேண்டும் என்று, கேவலம் மானிடர்களுடைய தாரதம்யத்தை யறியமுடியாதிருக்க, எவ்வாற்றாலும் சிறந்தோங்கிய தேவர்களுள், சிவனே பெரியவனென்றும், விஷ்ணுவே பெரியவனென்றும், இதுபோல் மற்றுமுள்ள தாரதம்யத்தை யறிய வெங்ஙனங் கூடும். ஆதலால தான் வழிபடுந் தெய்வத்தில் மிகுந்த பக்தியுடையவனாயிருப்பினும் பிறதெய்வங்களைத் தூஷியாமலிருக்கலாகாதா?

அந்தோ! கலியின் கொடுமை!! ஏதோ சிலவற்றையும் கசடறக் கற்காத சிலவசடர்கள் வீண் விவாதமாய்ப் பிதற்றி, பண்டிதர்கள் நிறைந்த பேரவையில் மகசித்தாந்தஞ் செய்கிறேமென்றும், "मतिक्षयान्निवर्तन्ते न गोविन्दगुणक्षयात्" பரமாத்மாவின் பரம மங்கள குணங்களைப் புத்திக்கெட்டியவாறு புகழ்ந்து திரும்புகின்றார்களேயன்றி குணங்கள் முழுதினையும் கூறுவதென்பதஸாத்தியம் என்றதனையுஞ் சிறிதுமறியாமலீசன் தன்மையை முழுதும் யாமே கண்டோம், என்றும் எல்லையில்லாமலும், இறைவனொருவனுளனென்று அன்னார்க்குச் சிறிதும் பயப்படாமலும் தம்மைச் சகலகலா பண்டிதர்களாகப் பாவித்துப் பிதற்றுவது புரிதபிக்கத் தக்கதே. அந்தோ! அவர்கள் என் செய்வார்கள்? இவையெல்லாம் காலத்தின் கோலம்; இவ்விதம் பரதெய்வநிந்தகர்களை, தாம் வழிபடும் தெய்வ விஷயத்திலும், போலிப் பக்தர்களென்றே கூற வெற்குத் தக்கதோர் துணிபுண்டு. தொடர்ந்ததைச் சுருக்கி மேற் செல்வன்.

பரமனிடம் பக்தி செலுத்துந்காரணமிதுவெனவும் இம்மானிடப்பிறவியினின்று "न च पुनरावर्तते। न स पुनरावर्तते" என்று வேத முடிகள், முறையிடும் வண்ணமினிவாரா நெறியினையெய்ததற்கு மானிடப் பிறவியே தகைமைத்தென்று, சிவப்பிரகாசஸ்வாமிகள் "பிரபுலிங்கலீலை"யில் கூறியிருத்தல் காண்போம்.

எய்தற்கரியயாக்கை தனக்செய்திற் றென்றுலது கொண்டு
செய்தற் கரியவறங்கள் பலசெய்து தயர்கூர்பிறவியினின்
றுய்தற்கொருமை மெறவொண்ணாதழல் வோனுடம்புபொற்-
கலத்தில்
பெய்தற்குரியபால் சுமரிற் பெய்ததொக்கு மென்பரால்.

கிடைப்பதற்கரிய மானிடப் பிறவியை யடைந்த வொருவன் அச்சரீரங்கொண்டு அந்தகனும் நாளை வருமோ?

வந்திடில் அறஞ்செயக் காலங் கிடைப்ப தரிதே யென்ற வப்போழ்து கிடைத் தளவில் நலம் விளை நல்லறத்தைச் செய்து தனதுடம்பின் பலனைப் பெறுனுகி காணி, மனை, மக்களென்னும் பாசவலையிற்பட்டு மோசமாம் நாசத்திற் கேதுவா யுழல்வானாயின் இவன் பெற்ற வுடம்பு தங்கக் கிண்ணத்தில் வைத்தற்குரிய பாலை நிலப் பிளப்பிற் கொட்டியதே போலாகுமன்றி வேறென்னாம்? ஆதலினிச் சரீரமே மேற் கூறிய நலனைப் பெறுதற்குக் காரணமாமெனக் கூறினர். இதற்குத் தக்க சான்ருக பரமாசாரியாள் ஸ்ரீ சங்கரபகவத் பாதாளும்,

इतः को न्वस्ति मूढात्मा यस्तु स्वार्थे प्रमुह्यति।
दुर्लभं मानुषं लोके प्राप्य तत्रापि पौरुषम् ॥

உலகத்திலவரவர்கள் தங்கள் காரிபத்தைக் கைவிடாது பார்க்கிறூர்களென்றும் இக்காலத்திலேவரும் ஸ்வகாரிய புலிகளென்றும் பழமொழியாய்க் கூறுகின்றூர்களே அஃதென்ன பொய்மையோ! ஏனெனில் அடைய முடியாத மானிடப் பிறவியினுமாண்மையினை பெற்றும், தானிங்கு வந்ததெதற்காக வென்றும், இச்சரீரம் தனக்கெவ்வாறு கிட்டியதென்றும் இதனைக்கொண்டு பிறர்க் குதவி புரியாவிடினும் தானடைய வேண்டுவதென்னை யென்றும் ஓர் சிறிதுமாலோசியாமல் தன் காரியத்திலேயே நினைவழிந்து தடுமாறுவானுயினிவனின்னுமுலகிலுளனே மூடன் என்று தானே பரிதபிக்கிறூர்கள். அவர்களன்புகொண்டு நம்மவர்க்கருளியவாற்றை சேடனுஞ் செப்பலாற்றுமோவெனில் அறிவிற் சிறியமானவர்களெம்மட்டில்? போதம்பெற்ற புண்ணியர்கள் சகலநலனும் நலகனியும் பலபொருளும்பெற்று பகவான் பார்வதிபதியின் பாதாரவிந்தமே போதம் விளைக்கும் பரமபதியிற் பாதையளிக்குமென்று மெய்ப்பத்தராய் மெய்யுருவுங்கொண்டு மூக்காலமுமழியாது நிற்பர் ஆன்

ணரைக் காணுங்கால் நமைத் தொடர்ந்த கலியுந்தாவே கலியும். ஆகவே ஈசனிடத்தன்பு செலுத்துவதினும் மே லானது பத்தரை பணிவது. எனப்பரஞ் சோதிமுனிவர் திருவிளையாடலில் கூறியிருக்கலிங்குச் சிந்திக்தற்பாலதே. விருத்தகுமார பாலரான படலத்தில் கௌரியை வைணவ ப்படிவ வேதியன் மணந்து தனதில்லஞ் சேர, அவனது பெற்றோர்கள் சைவநெறிப் பெண்ணை யேன் மணந்து வந் தாய் என்று மிகவுமவளை வெறுத்து வீட்டுடன் சேராத படி விலக்கினார்கள். இவ்வா றிருக்கவோர் நாள் அயற் கிராமத்தில் தஞ்சுற்றத்தார் வீட்டில் திருமணம் நேர அவ் வமய மிவர்க ளிவளைத் தனியே வீட்டில்விட்டு சமயலறை யையும் பூட்டிக்கொண்டு சென்றார்கள். அது தருணம் தனியே யிருக்கும் கௌரியும் மனநைந்தவளாய் அந்தோ இங்கு வந்தது முதல் யாதாமொரு சிவபக்தரைக் காணே னே; திருநீரணிந்த செல்வரைக் காண்பதே மும்மலங்களைக் கழிக்குமுபாயமென வுபநிடதங்கூறுகின்றதென பெரியார் வாயிலாகக் கேட்டுளேனே; அத்தகைய சிவனடியாரைப் பார்ப்பதற்கென் செய்வேன்? என்றுபுலம்பி அப்பெரியார் பெருமையினைப் பெருகப்பேசுவாளாயினள்.

சிவனடியார்க்கன் பிலாச்சிந்தையேயிரும் யேவல்செய்தநாளு
மவனடியார் திறத்தொழுகா வாக்கையே மாஞ்செவி கண்ணு
திமையுந்தம்
பவனடியாரிடைச் செலுத்தாம் படிவமே பாவைமறை
பரவஞ்சைவ
தவநெறியல்லா நெறியேபவ நெறியென் றறிபவளாய்த் தளர்
வாள்

பின்னும் இதன் பொருள். சிவனடியாரிடத் தன்பு செ லுத்தா மனமிரும்பே யாகும். அதாவது இரும்பானது எங்ஙனஞ் சீக்கிரமாகவே துருப்பிடித்து சீக்கிரத்தில் அதைவிட் டகலாதிருக்கின்றதோ, அதுபோலவே மன

மும் அடியவர் பாதஞ் சேராவிடிற் சீக்கிரமே களங்கமடைந்து அஃன்னுரைக் காண்பதாகிறவொன்றையன்றி வேறெவ்வாற்றலும் மல நீங்காது மானவரைக் கெடுக்கும். அப்பதற் கேவற்றெழில் புரியாச் சரீரமும் மரமேயாகும். அதாவது கோடரி மரத்தினைக் கோடரிகொண்டு கணுக்கணுவாய்க் குறைப்பதுபோன்று இயம தூதர்களு மிவன் தேகத்தைச் சித்திரவதையாய்ச் சிதைப்பார்கள். கண்ணு திரையைம்புலன்களும் அச்சித்தந் தெளிந்த வுத்தமர்களிடஞ் செல்லாவிடின் அவை பாவையேயாகும். அதாவது சுவற்றில் பலவர்ணங்கொண்டு வரையப்பெற்ற படம் வெகுநாளதுபோலிருந்து நாளடவில் உருவ மங்கி பார்ப்பவர்க் கிஃதெவ்வுருவமென்றுகூட வறியக் கூடாததாகின்றதோ, அத்தன்மைபோல் ஐம்புல னமைந்த கொடியனும் பலகாலமிச் சன்மத்தினின்று பிறகு படுகுழியிற் பதிந்த பல்வேறுமீனமான யோனியி லுதித்துப் பிறகு இன்னவுயிரிற் சேர்ந்தவனென்றும் இன்னவகுப்பிற் சேர்ந்தவனென்றும் அறியவெண்ணா தழிந்தவலமாகிறான். மற்றும் மறைகள் முறையேமுறையிடுஞ் சைவதவநெறியல்லாத மற்றெந்த மார்க்கமும் ஸம்ஸாரஸாகரத்திற் சிக்கி யுழல்விக்கும் பாதை யென்றே யுழன்று மற்றும் கூறியதையும் நன்கிங்குணர வேண்டுவதொன்றே.

எவ்வுயிர்க்கு முறுதியிகபரமென்பவவை கொடுப்பானெல்லாந்
[தானு
யனைத்துயிர்க்குமுயிரா குமரனென்பவ வனறிவார்க்கந்தம் வாக்கு
மனத்திறு மெய்ப்பத்தி வழிவருமென்ப பவப்பத்தி வழிநிற்பார்க்கு
வினைத்துயர் தீர்த்திட வெடுத்தவடிவென்பத வனடியார் வேடமன்
[றோ?

உலகிலுதித்த ஸகல ஜீவராசிகளுக்கு மிகம், பரமெனவிரண்டே யுறுதியாகும். எல்லாந்தானாய், எவ்வுயிர்க்கு முயிராய் நிற்குமீசனே யிவ்விரண்டினையு மளிக்கவல்

லோன், என்றும், அவ்விசனே யறிவாற்கே, மெய், வாக்கு, மன, மெனுமிம்மூன்றுனு முண்மையாம் பக்தி கசிந்தொழுகுமென்றும் பெரியார் கூறுகின்றனர். அவர்கள் தீவினைத் தொடரை யறுப்பதற்கு யிலைறவன்றுனே வருவது போல்வ தல்லவா? அவனடியார் வேடமென்பது, அத்தகைச் சான்றோரைச் சற்றுங் காணவரிதாயிற்றே! இதவு மிறைவனுனேயோ!! அல்லது மறையவனே யிவ்விதமென்றலையில வறைந்தானே!!! என்று கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகக் கதறுங்காலை, கருணாநிதியாய், தனைக் கொருகதியாய், மறைகளுந் துதியாநிற்கும மதுரைநாயகன் அருள் கூர்ந்து, மனதம்த கௌரி கருதியவண்ணமே, விருத்த வேதியரைபபோற் சிவனடியார் கோலங்கொண்டு, தன திருக்கையின் மீண்டு, கௌரியின் ல்லத் தலைவாயில் சேர்ந்து இன்னுள் திருமுகங் கூர்ந்து நோக்கி, 'அம்மா, யான வெகுநாட் பசியாற் சேர்ந்திங்கு பசிகருணவு கிடைக்குமென வந்தேன், பசி தவிர்ப்பாயாக' என, வந்திருக்கும் வேதியர் புகறலும், கௌரி 'சிவநேசச்செல்வரே! எனது உற்றூர்யாவருமெனனைத் தனியேவிட்டுச் சமயலறை பூட்டி, அயலூர் சென்றிருக்கின்றூர்களே! என செய்வேனென்று மனறு மனவாட்டமோடிருக்க, வேதியன், விமலையே, நினது பொற்கையாற் பூட்டினைத் தொடுவாயாயின் தானே திறந்திடுமென்றருளலும், கௌரியுமவ்வாறே செய்து சபாடந்திறந்து, அறுசுவையுண்டி யமுதெனவாக்கி, அகப்புறத்தமர்ந்த வந்தணரெய்தி, ஐயனே வாருமென்றனபுடனழைத்து, பாதமலரைப் பரிவுடனலம்பி, பரிகலந்திருத்திப் பரிமாறினளே. பிறகு இடை யிடையே, அவர் புசிக்குந் தருணமுகமனியம்பி, தன கையால் அவர் வாயிலுண்டியூட்டவும், விருத்த வேதியர் தேவாமிருத முண்டவரைப் போல், தளர்ந்த தேகம, கிளர் மணிச்சுடராய் மன்மதவடிவாய் பதினாறு வயது வாலிபனாய் விளங்கினர். அதுகண்ட கற்பலரி பூண்ட கன்னியும் மதமயங்கி, யோர்புறத தொதுங்கினருள. இங்கிவ்வாறிருக்க, விவாஹ நிமித்தம், சென்றிருந்த விவளது சுற்றததாரனைவரும் வீடுவந்து சேரவும், கடவுள், தருணைகொண்டு, சிறு குழந்தையாய் தரையில கிடந்து [illegible] கொண்டிருந்தது.

(இன்னும் வரும்.)

T. N. இராமச்சந்திர சாஸ்திரி.